ஜெகத்தாரணி

செந்தமிழ் வாசகம்

இரண்டாம் வகுப்பு

(இரண்டாம் பருவம்)

ஆசிரியர்

குரும்பை உலகநாதன்

மற்றும் ஆசிரியர் குழு

அட்டைப் படம் மற்றும் புத்தக வடிவமைப்பு

V.ஜெகந்நாதன்

ஜெகத்தாரணி பப்ளிஷிங் ஹவுஸ்

எஜுகேஷனல் பப்ளிஷர்ஸ்

48/40, வடக்குச் சித்திரை வீதி, மதுரை – 625001

சென்னை மதுரை கோவை

© உரிமை பதிப்பாளருக்கே செந்தமிழ் வாசகம்
பதிப்பாளர் : ஜெஸ்ஸி பப்ளிகேஷன்ஸ்
நான்காம் பதிப்பு : 2023 (புதிய பாடத்திட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட நூல்)
பாடநூல் தொகுப்பு : குரும்பை உலகநாதன்

நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல பங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஸ மாகே
காஹே தவ ஜய காதா
ஜன கண மங்கள தாயக ஜய ஹே
பாரத பாக்ய விதாதா
ஜய ஹே ஜய ஹே ஜய ஹே
ஜய ஜய ஜய ஜய ஹே !

– மகாகவி இரவீந்திரநாத் தாகூர்.

தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரதக் கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
உன் சீரிளமைத் திறம் வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே !! வாழ்த்துதுமே !!!

– மனோன்மணியம் பெ.சுந்தரனார்

தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

“நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக் காத்து வலுப்படுத்தச் செயற்படுவேன்” என்று உளமார நான் உறுதி கூறுகிறேன்.

“ஒருபோதும் வன்முறையை நாடேன், என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும், ஏனைய அரசியல் – பொருளாதார குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேன்” என்றும், நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

முகவுரை

"செந்தமிழ் வாசகம்" என்னும் இவ்வரிய நூல் பள்ளிச்சிறார்களின் அழகிய கரங்களில் தவழப்போவதை நினைத்து மகிழ்ச்சி அடைகிறோம். இன்றைய குழந்தைகளின் பன்முக ஆற்றல்களான உணரல், படித்தல், பேசுதல், எழுதுதல், வரைதல், வண்ணமிடுதல், கற்பனைத்திறன் வளர்த்தல், பாடுதல், ஆடுதல் போன்றவற்றை வளர்ப்பதில் இந்நூல் உறுதுணை புரியும் என்று நம்புகிறோம்.

சின்னஞ்சிறு மழலைச் செல்வங்கள் சிந்தை மகிழப் படிக்கும் வகையில் அழகாகவும் அற்புதமாகவும் அமைந்துள்ளது, இந்த "செந்தமிழ் வாசகம்". தமிழை, தமிழ்ச்சொற்களை எளியமுறையில் அறியவும், எழுதவும் ஏற்ற முறையில் எளிமையும் இனிமையும் பொருந்திய வார்த்தைகளைக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது. சொற்களின் பொருளை விளக்குவதற்கு ஆங்காங்கே அழகிய படங்களுடன் அலங்கரிக்கப்பட்டுள்ளது.

அறநெறியைப் போதிக்கும் வண்ணம் அற்புதமான சிறுசிறு பாடல் தொகுப்பினையும், நீதிக்கதைகளையும் ஆங்காங்கே ஆசிரியர் கையாண்டுள்ளது குழந்தைகளின் படிப்பாற்றலை ஊக்குவிக்கும். கதை, கவிதைகளின் மூலம் சிறந்த வாழ்க்கையின் ஒழுங்குமுறைகளும் நீதிகளும் உணர்த்தப்பட்டுள்ளன. பாடத்துடன் இணைந்த பயிற்சிகள் குழந்தைகளின் புரிதல் திறன் கண்டறியும் வண்ணம் அமைந்துள்ளன. அரசு கல்வித்துறையால் அறிமுகப்படுத்தப்பட்ட தொடர் மற்றும் முழுமையான மதிப்பீடு ("CCE METHOD") நவீனப்படுத்தப்பட்ட கல்விமுறையைக் கையாண்டுள்ளது, நற்பயனை நல்க வல்லது.

குழந்தைகள் விரும்பிப் படிக்கும் வகையில், நல்ல சந்தத்துடன் கூடிய வெல்லத்தமிழ்ப் பாடல்களும், குழந்தைகளின் படிக்கும் வேட்கையை நன்கு தூண்டும் வண்ணம் அமையப்பெற்றுள்ளன.

இத்தகைய சீரிய எங்கள் முயற்சியினை பெற்றோர்களும், ஆசிரியப் பெருமக்களும் அங்கீகரித்து, தமிழ்மொழியினைப் பயிலும் மாணவச் செல்வங்களும் இந்நூலை நல்லதொரு வழிகாட்டியாகப் பயன்படுத்திக் கொள்ள அன்புடன் வேண்டுகிறோம். இப்புத்தகத்தின் நிறைகுறைகளை எங்களுடன் பகிர்ந்துக் கொள்ளத் தமிழ்கூறும் நல்லுலகோரை அன்புடன் வேண்டுகிறோம்.

பதிப்பகத்தார்

ஆசிரியர்க்கு

" வீறுடை செம்மொழி தமிழ்மொழி உலகம்
வேரூன்றிய நாள் முதல் உயிர்மொழி "

– பாவலரேறு பெருஞ்சித்திரனார்.



எந்தக் கருத்தையும் கேட்பவர் மனங்கொள்ளும் அளவு பாடலாக, இசையாக, செய்தியாக, கதையாக, புனைந்து கூறும் அளவிற்கான மொழித்திறனை கற்றல் மூலம் குழந்தைகளிடம் உருவாக்கும் வகையில் எமது இப்புத்தகம் வடிவமைக்கப் பட்டுள்ளது.

1. என் நினைவில் :



முன் பருவத்தில் பயின்ற அனைத்து திறன்களையும் நினைவு கூர்ந்து அவற்றை இப்பருவப் பாடங்களோடு தொடர்புபடுத்தி கற்பதற்கான நினைவு கூறும் செயல்கள் இச்செயல்பாட்டில் கொடுக்கப்பட்டுள்ளன. மாணவர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்திருப்பது இவற்றின் சிறப்பு.

2. மாணவர்களின் முழுமையான மொழி ஆளுமைத்திறன் அவர்களின் பேச்சு மூலமாகவே முதலில் வெளிப்படும், பேசுதல் திறனை அதிகரிக்க உரையாடல் வடிவ நிகழ்வுகள் தரப்பட்டுள்ளன.



3. சொற்கள், தொடர்கள் என வரிசையாக படித்து அதிலுள்ள பொருள் மற்றும் செய்தியைப் பற்றிய விழிப்புணர்வு பெற உதவும் வகையில் சிறு சிறு தொடர்களாக செய்திகள் தொகுத்து கொடுக்கப்பட்டுள்ளன.

4. செய்யுள் என்பது படிப்பதற்கு சுமையாக இல்லாமல் சுலபமாக புரியும் வகையில் ஆத்திசூடி படக்கதைகளாகவே தெளிவாக அழகாக கொடுக்கப்பட்டுள்ளது.

5. மனதை ஒருமுகப்படுத்த கதைகள் குழந்தைகளை பெரிதும் ஈர்க்கின்றன. வெறும் படக்கதைகள் அவர்களாகவே கதையை கற்பனையுடன் கூற வழி வகுக்கும் அளவில் கொடுக்கப்பட்டுள்ளது. பின்னர் சொற்கள, தொடர்கள், உரையாடலுடன் கூடிய படக்கதைகள் ஆகியவை தொடக்க நிலையில் குழந்தைகளின் படித்தல் வேகத்தை அதிகரிக்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது சிறப்பு.

6. எளிய சொற்கள், சிறு சிறு தொடர்கள் ஆகியவற்றை தாமாகவே சொந்தமாக பேச, எழுத மாணவர்கள் விருப்பமுடன் முன்வரும் வகையில் இப்பயிற்சிகள் அளிக்கப்பட்டுள்ளன.



7. விடுகதைகளுக்கான விடைகளைக் கண்டறிவதிலும், புதிர்களை விடுவிப்பதிலும் மாணவர்களின் ஆர்வம் அளவிட முடியாதது ஆகும். இந்த ஆர்வத்தை நம் கற்றலுக்கு பயன்படுத்திக் கொள்ளும் வகையிலும், அவர்களின் நுண்ணுணர்வுகளை தூண்டும் வகையிலுமாக விடுகதைகளும், புதிர்களும் வடிவமைக்கப்பட்டுள்ளன.

8. மாணவர்கள் எதுவுமே புரியாமல் வெறும் மனப்பாடம் செய்து தேர்வில் எழுதுவதை தவிர்த்து ஒவ்வொன்றையும் தானாகவே செயல்பாடுகளின் மூலமாகவே கற்றுத் தெளிந்து அவர்களாகவே கேள்வி கேட்க, விடைகளை ஆராய்ந்து அறிய, உணர்வு மற்றும் பிரச்சனைகளை தயக்கமின்றி தெரிவிக்க உதவும் வகையிலான பயிற்சிகள் தரப்பட்டுள்ளது மிக சிறப்பு ஆகும்.

ஒவ்வொரு குழந்தையும் சான்றிதழ் தரப்படாத அறிவியல் அறிஞர் எனக் கூறினால் மிகையாகாது. தமக்குத் தோன்றும் புதுமையான கருத்துக்குச் செயல்வடிவம் கொடுத்து சோதித்துப் பார்ப்பதில் குழந்தைளுக்கு நிகர் அவர்களே ஆவர்.

ஒவ்வொரு குழந்தையும் தனித்திறமையுடையவர். ஆற்றலின் ஊற்று அவர்களுக்குள்ளேயே இருக்கிறது. அவர்களை ஊக்குவித்து ஆசிரியர் கை கொடுத்தால் மட்டுமே அவ்வூற்று மேலும் சுரக்கும்.

இப்புனிதமான பணிக்கு ஒரு சிறப்பு உதவியாக எமது இப்புத்தகம் நிச்சயம் பயணப்படும் என்பதில் ஐயமில்லை.

வகுப்பறை வண்ணமயமாகட்டும்.

குழந்தைகள் குதூகலமாகட்டும்.

பொருளடக்கம்

வ. எண்	பாடத்தலைப்பு	பக்க எண்
	என் நினைவில்	7
1.	அழகுத் தோட்டம்	13
2.	நண்பரைக் கண்டுபிடி	18
3.	பூம்பூம் வண்டி	20
4.	வாழ்த்தலாம் வாங்க	30
5.	ஓடி விளையாடு பாப்பா	34
6.	ஆத்திசூடி	37
	வந்த பாதை	44

என் நினைவில் எங்கே வந்தார்கள்?

சுருங்கி விரிந்து
சுருங்கி விரிந்து
புழு வந்தது



அசைந்து ஆடி
அசைந்து ஆடி
யானை வந்தது

தத்தித் தாவி
தத்தித் தாவி
தவளை வந்தது



வளைந்து நெளிந்து
வளைந்து நெளிந்து
பாம்பு வந்தது

கூவிப் பாடி
கூவிப் பாடி
குயில் வந்தது

குதித்து ஓடி
குதித்து ஓடி
முயல் வந்தது

பதுங்கிப் பாய்ந்து
பதுங்கிப் பாய்ந்து

.................வந்தது

தோகை விரித்து
தோகை விரித்து

.................வந்தது

மெல்ல நகர்ந்து
மெல்ல நகர்ந்து

.................வந்தது

எல்லாரும் எங்கே வந்தார்கள்?

சிறுசிறு தொடர்களை சொல்லக்கேட்டு, பின் தொடர்ந்து கூறுக.

எல்லாரும் அருகில் உள்ள அருவியில் குளிக்க வந்தார்கள்

குளிக்க வந்த நண்பர்களுக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்



பலமுறை சொல்லிப் பழகுக

வழலைக் கட்டி
நழுவி விழுந்தது

ஆற்றங்கரையின் ஓரம்
பாறையெல்லாம் ஈரம்

கிளையின் நிழல்
மலையில் விழுந்தது

வெள்ளை முயல்கள் வயலிலே
துள்ளி விளையாடின

முதலையும் தவளையும்
மழையில் நனைந்தன

குளக்கரையோரத்துக் குழி
குதித்து விழுந்தது நரி

படம் பார்த்துக் கதையைக் கூறுக



கதைக்குப் பொருத்தமான தலைப்பை எழுதுக

அகரவரிசைமுறை அறிவோம்



அகரவரிசைப்படுத்துக

தீ, தங்கம், தூறல், தாகம், திண்ணை, தேனீ, தும்பிக்கை, தென்னை, தொன்மை, தையல், தோல், தௌவை



உரிய ஒலிப்புடன் படித்துப் பழகுக

சுவரில் அடிப்பது - ஆணி

தமிழ் மாதங்களில் ஒன்று - ஆனி

நாய்க்கு இருப்பது - வால்

போரில் பயன்படுவது - வாள்

வீட்டில் வளர்ப்பது - கோழி

சிறுவர்கள் விளையாடுவது - கோலி



சுவரில் ஊர்வது - பல்லி

படிக்கச் செல்வது - பள்ளி

விறகை எரித்தால் - கரி

வீட்டில் சமைப்பது - கறி



சூரியன் உதிப்பது - காலை

மாடுகளில் ஆண் இனம் - காளை

கை!வை!வரை!








இவற்றையும்
வரைந்து
பாருங்கள்



1. அழகுத் தோட்டம்

தோட்டத்திலே வண்ணப்பூவும்
பூத்துக் குலுங்குது
பார்த்ததுமே சின்னத்தேனீ
பாட்டுப் பாடுது

பசுமையான புல்லைத்தேடி
மாடும் மேயுது
பக்கத்திலே கன்றுக்குட்டி
துள்ளி ஓடுது

உயரமான மரத்தினிலே
பழமும் தொங்குது
பச்சைக்கிளி பறந்துவந்து
கொத்தப் பார்க்குது

அழகுத்தோட்டம் பார்க்கும்போதே
நம்மை இழுக்குது
ஆட்டம்ஆடி பாட்டுப்பாட
ஆசை பொங்குது.

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.

பயிற்சி

படித்துப் பழகுக

பூத்துக் குலுங்குது | பாட்டுப் பாடுது | துள்ளி ஓடுது

மாடும் மேயுது | பழமும் தொங்குது | கொத்தப் பார்க்குது

நம்மை இழுக்குது | ஆசை பொங்குது

படித்தும் எழுதியும் பழகுக

ஆசை | சின்னத்தேனீ

பச்சைக்கிளி | கன்றுக்குட்டி | தோட்டம்

படத்தை உரிய சொல்லுடன் இணைக்க



பச்சைக்கிளி

வண்ணப்பூ

சின்னத்தேனீ

பசும்புல்

உயரமான மரம்

பேசுவோம் வாங்க!

அழகுத்தோட்டத்தில் எவையெல்லாம் இருந்தன?

உனக்குப் பிடித்த வருணனைத் தொடரைக் ✓ குறியிடுக

- புயல் மழை ☐
- சாரல் மழை ☐
- அடை மழை ☐

- ☐ அழகு முயல்
- ☐ சின்ன முயல்
- ☐ வெள்ளை முயல்

- பச்சைக் கிளி ☐
- பேசும் கிளி ☐
- பழம் தின்னும் கிளி ☐

- ☐ வட்ட நிலா
- ☐ வெண்ணிலா
- ☐ பால் நிலா

படத்திற்குப் பொருத்தமான வருணனைத் தொடரை எழுதுக.





சொல்லோடு விளையாடு



குரங்கு குருவி விறகு கும்மி மிளகு

உரிய எழுத்தை எழுதி நிரப்புக

					
ஆமை	மைனா	எறும்........	........றா	கு........	........க்குட்டை

முடியும் எழுத்தில் தொடங்கும் சொல்லை எழுதுக

சிறகு		அடுப்பு	
சிரிப்பு		அம்மி	

புகை

மிளகு

புத்தாடை

குயில்

விரலோவியம்

நீங்களும் செய்து மகிழுங்கள்



2. நண்பரைக் கண்டுபிடி!



முயல்: நீங்களே கண்டுபிடியுங்களேன்.
நான்கு கால்கள் கொண்டவர்.

வாத்து: எருமை மாடுதானே?

முயல்: இல்லை.
கூரான கொம்புகள் இருக்காது.
பெரிய உருவம் கொண்டவர்.

குரங்கு: ஓ...நான்
சொல்லட்டுமா...
யானைதானே?

முயல்: ஊகூம். நீண்ட
தும்பிக்கை இருக்காது.
வேகமாக ஓடுவார்.

கழுகு: எனக்குத் தெரியும்.
புலிதானே?

முயல்: இல்லை
கருப்பு மஞ்சள் வரிகள்
இருக்காது. நீண்ட கால்கள்
இருக்கும்.

நரி: வரிக்குதிரையா?

முயல்: இல்லை.
கருப்பு வெள்ளை வரிகள்
இருக்காது. நீண்ட கழுத்தைக்
கொண்டவர்.

கிளி: ஐ! தெரிந்துவிட்டது.
ஓட்டகம்தானே?

முயல்: இல்லையே!
உருண்டையான திமில்
இருக்காது. உடலில்
கட்டங்கள் இருக்கும்.

அனைவரும்: ஓ!நாங்கள்
கண்டுபிடித்து விட்டோம்.

புது நண்பர் வந்தார். விளையாட்டு தொடங்கியது.

புது நண்பர் யாரென்று உங்களுக்குத் தெரியும்தானே?

அவர் பெயரை எழுதுங்கள் ....

பயிற்சி

படித்துப் பழகுக

கூரான கொம்புகள்

நீண்ட தும்பிக்கை

கறுப்புப் புள்ளிகள்

உருண்டையான திமில்

கறுப்பு வெள்ளை வரிகள்

எழுதிப் பழகுக.

நண்பர் | திமில் | தும்பிக்கை | கொம்புகள்

வரிகள் | ஒட்டகச்சிவிங்கி | கழுத்து

பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. நீண்ட தும்பிக்கை உடையது யானை. ☐
2. ஒட்டகச்சிவிங்கியின் முதுகில் திமில் இருக்கும். ☐
3. சிறுத்தையின் உடலில் கறுப்பு வெள்ளை வரிகள் இருக்கும். ☐
4. வரிக்குதிரைக்குக் கொம்புகள் இல்லை. ☐
5. மாட்டிற்குக் கூரான கொம்புகள் இருக்கும். ☐

பொருத்துக.

1. நான்கு கால்கள், கூரான கொம்புகள் - ஒட்டகம்
2. பெரிய உருவம், நீண்ட தும்பிக்கை - வரிக்குதிரை
3. நீண்ட கால்கள், கறுப்பு வெள்ளை வரிகள் - யானை
4. நீண்ட கழுத்து, உருண்டையான திமில் - மாடு

வாய்மொழி விடை தருக.

1. இக்கதையில் புது நண்பர் எவ்வாறெல்லாம் வருணிக்கப்படுகிறார்?

விடை எழுதுக.

1. உடலில் கறுப்பு வெள்ளை வரிகளைக் கொண்ட விலங்கு எது?
2. புதிதாக வந்த நண்பர் யார்?

ஆனந்தியின் பெட்டியில் ...

இவள் ஆனந்தி, குட்டி குட்டிப் பொருள்களைக் கூட சிறுக சிறுகச் சேர்த்து வைப்பாள்.

இது, ஆனந்தியின் பெட்டி
எத்தனை பொருள்கள்
பாருங்களேன்!

சேர்த்து வைத்தவை பற்றி எழுதி வைப்பது ஆனந்தியின் வழக்கம்.

நீல நிற சிறகு
வழவழப்பான கூழாங்கல்
வண்ண வண்ண மணிகள்
சொரசொரப்பான கிளிஞ்சல்
பளபளப்பான கோலிகுண்டுகள்
வண்ண வண்ணத் தாள்கள்
சிறிய பெரிய கொட்டைகள்

இது போல நீங்களும் சேகரிப்பது உண்டா? அவற்றைப் பற்றியும் எழுதலாமே!

ஆறு வேறுபாடுகளைக் கண்டுபிடித்து வட்டமிடுக

உற்றுநோக்கு ⇨ சேர் ⇨ உருவாக்கு



சேர்ப்போம்
உருவாக்குவோம்



பல்வேறு உருவங்களை உருவாக்கி மகிழுங்கள்

குட்டிக்குரங்கின் ஒருநாள்...








வேரில் பழுத்த பெரிய பலாச்சுளையை
வேண்டுமட்டும் தின்றிடுவேன்

குளிர்ந்த குளத்து நீரிலே
குதித்து நீந்தி விளையாடிடுவேன்

வாலைச் சுருட்டி வளைந்த கிளையில்
தலைகீழாகத் தொங்கிடுவேன்.

அம்மா என்னைத் தேடும் முன்னே
விரைந்து ஓடி அம்மாவை
நான் சேர்ந்திடுவேன்.

3. பூம்பூம் வண்டி

பூம்பூம் பூம்பூம் பூம்வண்டி
புறப்படப் போகுது ஏறிடுங்க
பாதுஷா வண்டியின் ஓட்டுநராம்
நளனும் ஜெரினும் பயணிகளாம்

தலைநகர் டெல்லி பார்த்திடலாம்
ஸ்ரீநகர்கூட போய் வரலாம்
காடு மலைகள் பலதாண்டி
கடக்கப் போகுது பூம்வண்டி

ஆக்ரா நகரின் தாஜ்மஹால்
காஷ்மீர் ரோஜாத் தோட்டங்கள்
பார்க்க அழைக்குது பூம்வண்டி
புறப்படப்போகுது ஏறிடுங்க

படித்தும் எழுதியும் பழகுக

ஜ் ஜ ஜா ஜி ஜீ ஜு ஜூ ஜெ ஜே

ஜை ஜொ ஜோ

ஸ் ஸ ஸா ஸி

ஷ் ஷ ஷா ஷி ஷீ ஷு ஷூ ஷெ ஷே ஷை

ஹ் ஹ ஹா ஹி ஹீ ஹு ஹூ ஹெ ஹே ஹை

ஸ்ரீ

எவரெஸ்ட்

ரோஜா

தாஜ்மஹால்

ஷாஜஹான்



ஜான்சிராணி



ஜவஹர்லால் நேரு

நேதாஜி சுபாஷ்
சந்திரபோஸ்

ரம்ஜான், கிறிஸ்துமஸ், பாகிஸ்தான், ஜப்பான்,

அஸ்ஸாம், காஷ்மீர், ஸ்ரீநகர், ஜாங்கிரி, ஜிலேபி,

குலாப் ஜாமூன், பாதுஷா, பஜ்ஜி

எறும்பூரில் இனிப்பு விழா



பயிற்சி

யாரைப் போல் வேடமிட்டுள்ளனர்? பெயர்களை எழுதுக.

படம் பார்த்துப் பெயர் எழுதுக.

4. வாழ்த்தலாம் வாங்க

பர்வீன் படம் வரைந்துகொண்டு இருந்தாள். அப்போது அஜ்மல் வந்தான்.

"ஐ! மயில். அழகாக உள்ளது, அக்கா" என்றான் அஜ்மல்.

"வா!வா! உனக்குப் பிடிக்குமே ... வண்ணம் தீட்டுகிறாயா?" என்றாள் பர்வீன்.

"ஓ!" ஆர்வத்துடன் அமர்ந்தான் அஜ்மல்.

"இறகின் நடுவில் எழுத இடம் விட்டு வண்ணம் தீட்டு அஜ்மல்" என்றாள் பர்வீன். "ஏன் அக்கா?" என்று கேட்டான் அஜ்மல்.

"அந்த இடங்களில் ஆங்கில மாதங்களின் பெயர்களை எழுதப் போகிறேன்" என்றாள் பர்வீன்

"இது நாள்காட்டியா அக்கா!" என்று கேட்டான் அஜ்மல்.

"இல்லை. இது நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நினைவூட்டியா... புரியும்படி சொல்லேன் அக்கா" சிணுங்கினான் அஜ்மல்.

"இதை ஆசிரியரிடம் தருவேன். அந்தந்த மாதத்தில் பிறந்தவர்களின் பெயர்களை எழுதுவோம்." என்றாள் பர்வீன்.

"எதற்காக அக்கா?" என்றான் அஜ்மல்.

"மறக்காமல் வாழ்த்து சொல்லத்தான் இந்தப் பிறந்தநாள் நினைவூட்டி" என்றாள் பர்வீன்.

"நன்றாக இருக்கிறதே. எங்கள் வகுப்புக்கும் ஒன்று செய்யலாமா அக்கா?" என்றான் அஜ்மல்.

"ஓ, செய்யலாமே! இனி எல்லோரின் பிறந்தநாளிலும் மறக்காமல் வாழ்த்தலாம்".

படித்தும் எழுதியும் பழகுக!

ஜனவரி	பிப்ரவரி	மார்ச்சு	ஏப்ரல்
மே	ஜூன்	ஜூலை	ஆகஸ்டு
செப்டம்பர்	அக்டோபர்	நவம்பர்	டிசம்பர்

பயிற்சி

படித்துப் பழகுக

வண்ணம்	நாள்காட்டி
நினைவூட்டி	பிறந்தநாள்
வாழ்த்து	

எழுதிப் பழகுக.

பிறந்தநாள் வாழ்த்து ஜனவரி ஜூன்

ஜூலை செப்டம்பர் ஆகஸ்ட்

பொருத்தமான குறியிடுக - சரி ✓ தவறு ✗

1. பர்வீன் மயில் படம் வரைந்தாள்.
2. அஜ்மலுக்கு வண்ணம் தீட்டப் பிடிக்கும்.
3. பர்வீன் செய்தது நாள்காட்டி.
4. நினைவூட்டியில் தமிழ் மாதங்களின் பெயர்களை எழுதினர்.

பொருத்துக.

1. வண்ணம் தீட்டியது - பர்வீன்
2. மயில் வரைந்தது - நினைவூட்டி
3. பிறந்தநாள் - பன்னிரண்டு
4. ஆங்கில மாதங்கள் - அஜ்மல்

வாய்மொழி விடை தருக.

1. அஜ்மலும் பர்வீனும் பிறந்தநாள் நினைவூட்டியை எப்படியெல்லாம் உருவாக்கினார்கள்?

விடை எழுதுக.

1. ஆங்கில மாதங்களில் முதல் மாதம் எது?
2. நீ பிறந்த ஆங்கில மாதம் எது?
3. ஆங்கில மாதங்களில் கடைசி மாதம் எது?

இதோ உங்கள் வகுப்புக்கான பிறந்தநாள் நினைவூட்டி

ஆங்கில மாதங்களையும், அம்மாதங்களில் பிறந்த நண்பர்களின் பெயர்களையும் எழுதுக.

ஜனவரி
அர்ஜுனன்
பர்வீன் பானு

குறுக்கெழுத்துப் புதிரில் ஆங்கில மாதங்களின் பெயர்களை நிரப்புக



5. ஓடி விளையாடு பாப்பா



ஓடி விளையாடு பாப்பா - நீ
ஓய்ந்திருக்க லாகாது பாப்பா
கூடி விளையாடு பாப்பா - ஒரு
குழந்தையை வையாதே பாப்பா

காலை எழுந்தவுடன் படிப்பு - பின்பு
கனிவு கொடுக்கும் நல்ல பாட்டு
மாலை முழுதும் விளையாட்டு - என்று
வழக்கப்படுத்திக் கொள்ளு பாப்பா

சாதிகள் இல்லையடி பாப்பா - குலத்
தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்
நீதி உயர்ந்தமதி கல்வி - அன்பு
நிறைய உடையவர்கள் மேலோர்

- சுப்பிரமணிய பாரதியார்

பாடலைக் கேட்டுப் புரிந்துகொள்க - பாடி மகிழ்க.

பயிற்சி

படித்துப் பழகுக

ஓடி விளையாடு

ஓய்ந்திருக்கலாகாது

கூடி விளையாடு

குழந்தையை வையாதே

கனிவு கொடுக்கும்

சாதிகள் இல்லை

உயர்ந்த மதி

படித்தும் எழுதியும் பழகுக.

விளையாடு	வையாதே	கனிவு	உயர்ந்த மதி
குழந்தை	அன்பு	படிப்பு	பாட்டு

பாடலில் உள்ளபடி பொருத்துக

கனிவு கொடுக்கும்	விளையாட்டு
காலை	இல்லை
மாலை	மேலோர்
சாதிகள்	படிப்பு
அன்பு நிறைய உடையவர்	பாட்டு

பேசுவோம் வாங்க!

இப்பாடலில் பாரதியார் என்னென்ன கூறுகிறார்?

உரையாடலைக் கவனி. சரியான தொடரை ✓ குறியிடுக.

கமலி :- பூங்காவில் உள்ள ஊஞ்சலில் மல்லிகாவிற்கும் ஊஞ்சல் ஆட ஆசையாக இருக்கும் அல்லவா? ஆடியது போதும், அவளுக்கு விட்டுக்கொடு

- ☐ இருவருக்கும் ஊஞ்சலில் ஆட இடம் போதவில்லை.
- ☐ கமலி மட்டும் ஊஞ்சல் ஆடுகிறாள்.
- ☐ மல்லிகா ஊஞ்சல் ஆடக் காத்திருக்கிறாள்.

தேன்மொழி, நீ வீணை வாசிப்பதை கேட்டுக் கொண்டே இருக்கலாம். நேரம் போவதே தெரியவில்லை.

- தேன்மொழி நன்றாக வீணை வாசிப்பாள். ☐
- வளர்மதிக்கு தேன்மொழியின் வீணை வாசிப்பு பிடிக்காது. ☐
- தேன்மொழிக்கு நன்றாக வீணை வாசிக்கத் தெரியாது. ☐

என் பூந்தோட்டத்தில் எனக்கு மிகவும் பிடித்தவை, சிவப்பு வண்ணப் பூக்கள்.

- ☐ சிவப்பு வண்ணப் பூக்கள் மட்டுமே அழகானது.
- ☐ என் தோட்டத்தில் சிவப்பு வண்ணப்பூக்கள் மட்டுமே உள்ளன.
- ☐ என் தோட்டத்தில் பல வண்ணப்பூக்கள் இருக்கின்றன.

ஜான்சன் :- ஒவ்வொரு முறையும் ஓட்டப்பந்தயத்தில் நான்தான் வெற்றி பெறுவேன். இம்முறை நீ வெற்றி பெற்றாய். வாழ்த்துக்கள்!

- ஜான்சன் போட்டியில் கலந்து கொள்ளவில்லை. ☐
- ஜான்சன் வேகமாக ஓடுவான். ☐
- ஜான்சனால் இந்த முறை ஓட முடியாது. ☐

அத்தையின் அன்புப் பரிசான கிளிபொம்மை உடைந்துவிட்டது. வருத்தமாக இருக்கிறது.

அகிலாவின் வருத்தத்திற்கான காரணம்...

- ☐ அகிலாவிடம் வேறு பொம்மைகள் இல்லாததால்.
- ☐ அத்தை அன்பாகக் கொடுத்த பரிசுப்பொருள் உடைந்ததால்.
- ☐ அத்தை திட்டுவார் என்பதால்.

6. ஆத்திசூடி

ஒரு குளத்தில் நிறைய மீன்கள் இருந்தன.
மீன் குஞ்சு ஒன்று அதன் அம்மாவுடன்
இரை தேடிச் சென்றது.



பெரியபுழு ஒன்றைக் கண்டது.
"ஆகா! நல்ல உணவு கிடைத்து விட்டது.
அம்மா! நான் அதைப் பிடிக்கட்டுமா?"என்று
மீன்குஞ்சு அம்மாவைக் கேட்டது.

"சற்றுப் பொறு செல்லமே!
இதுவரை இதுபோன்ற புழுவை நான்
இந்தக் குளத்தில் கண்டதில்லை.
வா அருகே சென்று பார்ப்போம்"
என்று அம்மா மீன் கூறியது.





"அம்மா, அந்தப்புழு எதிலோ மாட்டிக்
கொண்டிருப்பது போல் தெரிகிறது", என்றது
மீன்குஞ்சு. அருகில் சென்று பார்த்த
அம்மா மீன், "இது தான் தூண்டில்.
இதைக் கவனிக்காமல், பிடித்திருந்தால்
நாமும் இதில் மாட்டியிருப்போம்" என்றது.

"இனிமேல் உங்களைப் போலவே நானும்
கவனமாய் இருப்பேன்," என்றது மீன்குஞ்சு.
புரிந்துகொண்ட மீன் குஞ்சுக்கு அம்மா மீன்
ஒரு முத்தம் கொடுத்தது.



பெரியோரைத் துணை கொள்

ஆத்திசூடி



இளமையில் கல்

ஆத்திசூடி

கேள்வி எழுந்தது — **வழி பிறந்தது**

பறவையைப்
பார்த்தான்.
பறக்க
நினைத்தான்.
முடியாதா?



பெண்கள்
நாங்கள்
படிக்கத்
தடையுண்டா?

ஊனமுற்ற
என்னால்
விளையாட
முடியாதா?



தொலைதூரத்தில்
இருக்கும் பாட்டி
பேத்தியுடன்
பேச முடியாதா?

பளுவைச்
சுமந்துதான்
செல்ல வேண்டுமா?
வேறு
வழியில்லையா?



கேள்வி முயல்

ஆத்திசூடி

வைகறை துயில் எழு

சிலம்பம் சுற்றிய அழகைப் பார்த்தாயா?
அதைப் பார்க்க நடிப்பு போன்று இல்லை.
அருமையான நாடகம்
அவர்கள் ஆடும் நடனம் என்னையும் ஆடத் தூண்டியது.
அந்தத் திரையில் வரையப்பட்டிருக்கும் ஓவியங்கள் என்னை மிகவும் கவர்ந்தது
அக்கா பாடிய தேன் போன்ற பாடல் இன்னும் என் காதில் ஒலித்துக்கொண்டே இருக்கிறது.
நமக்கு பிடித்தவற்றை நாமும் கற்றுக் கொள்வோம்.

வித்தை விரும்பு

பயிற்சி

படித்தும் எழுதியும் பழகுக

வைகறை துயில் எழு

பெரியோரைத் துணைகொள்

கேள்வி முயல்

இளமையில் கல்

வித்தை விரும்பு

உரிய தொடரைப் படத்துடன் பொருத்துக

இளமையில் கல்

கேள்வி முயல்

வைகறை துயில் எழு

பெரியோரைத் துணைகொள்

வித்தை விரும்பு

தமிழ்ச்சொல் அறிந்து பயன்படுத்துவோம்

பல்துலக்கி

குவளை

காலுறை

சீருடை

கழுத்துப்பட்டி

பொத்தான்

வெள்ளைத்தாள்

மட்டை

அழைப்புமணி

மின்விளக்கு

மெத்தை

நகரும் படிக்கட்டு

நிலைப்பேழை

வழலைக்கட்டி

கணினி

மடிக்கணினி

சுழல் நாற்காலி

தோள்பை

தொலைக்காட்சி

தொலைபேசி

வந்த பாதை

பொருத்தமான தொடருக்குக் ✓ குறியிடுக



தவளை தண்ணீரில் நீந்துகிறது

தவளை துள்ளிக் குதிக்கிறது

தவளை தண்ணீரில் மிதக்கிறது

வண்ணத்துப்பூச்சி சாப்பிடுகிறது

வண்ணத்துப்பூச்சி தேனை உறிஞ்சுகிறது

வண்ணத்துப்பூச்சி பூவில் தூங்குகிறது

சூரியன் கிழக்கில் உதிக்கிறது.

சூரியன் மேற்கில் உதிக்கிறது.

சூரியன் வடக்கில் உதிக்கிறது.

என்ன செய்கிறார்கள்? எழுதுக

மரம்



மரத்தில் ஒரு கூடு

கூட்டில் ஒரு பறவை

பறவை என்ன செய்கிறது?

தோட்டம்



தோட்டத்தில் ஒரு மலர்



மலரில் ஒரு வண்டு

வண்டு என்ன செய்கிறது?



கடல்



கடல் நீர்

கடலில் கப்பல்

கப்பல் என்ன செய்கிறது?

எந்த வாகனம் எந்த விலங்கிற்கு உரியது? எழுதுக. காரணம் கூறுக

யானை, சிறுத்தை, வரிக்குதிரை, மான், ஒட்டகச்சிவிங்கி, புலி





தொடரை நீட்டித்து எழுதுக

கிளி
பச்சைக் கிளி
மரக்கிளையில் பச்சைக் கிளி
ஆல மரக்கிளையில் பச்சைக் கிளி

ஊஞ்சல்

_______________ ஊஞ்சல் (மர / இரும்பு)

_______________ _______________ ஊஞ்சல் (சிவப்பு / கறுப்பு)

_______________ _______________ _______________ ஊஞ்சல் (பெரிய / சிறிய)

மலர்

____

____

____

செய்திகளைப் படித்தறிக

நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் அவர்களின் பிறந்த நாள் கொண்டாடப்பட்டது.

தாஜ்மஹாலை பாதுகாக்க நிதி ஒதுக்கீடு.

உதகையில் ரோஜா மலர்கள் உற்பத்தி அதிகம். காஷ்மீருக்கு ஏற்றுமதி.

ஹிதேந்திரன் உடல் உறுப்புகள் தானம்.

நமது நாட்டுப்பண் ஜன கண மன... இது 52 வினாடிகளில் பாடப்படுகிறது.

முதல் எழுத்தை மாற்றி உணவுப் பொருளாக்குக

தடை	வடை
சரி	
கூறு	
மோப்பம்	
பார்	
கிண்டல்	
உப்பளம்	
செங்கல்	
பூசை	

கொடுக்கப்பட்டுள்ள சொற்களைக் கொண்டு வெற்றுக் கட்டங்களை நிரப்புக.

(மாம்பழம், மரம், பார், பட்டம், பராமரிப்பு, மா)



வண்ணம் தீட்டுக.

கற்றல் விளைவுகள்

1.கேட்டல்	2. பேசுதல்	3. படித்தல்	4. எழுதுதல்	5. நடைமுறை இலக்கணம்
படங்கள், ஓவியங்கள், கதைப்படங்களை நுட்பமாக உற்றுநோக்கியும் சொல்லக்கேட்டும் சுவைப்பர். கேட்டறியாத, எளிய சொற்களமைந்த பாடல்களைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். சிந்தனையைத் தூண்டும் எளிய கதைகளைக் கவனத்துடன் கருத்தூன்றிக் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர். எளிய வாய்மொழி அறிவுரைகளையும் கட்டளைகளையும் வினாக்களையும் கேட்டுப் புரிந்துகொண்டு எதிர்வினையாற்றுவர். பிறர் பேசுவதைப் பொறுப்புடனும் கவனத்துடனும் கேட்டுப் புரிந்துகொண்டு வெளிப்படுத்துவர்.	ஓசைநயமிக்க பாடல்களைத் தனியாகவும் குழுவாகவும் உரிய ஒலிப்புடன் பாடுவர். படக்கதையைப் பார்த்து நிகழ்வைக் கூறுவர். செய்திகளைத் திரட்டும் பொருட்டு வினா எழுப்புவர். பார்த்தவை, கேட்டவை பற்றிப் பேசுவர். கேட்டும் படித்தும் அறிந்த பாடல்கள், கதைகளிலிருந்து கேட்கப்படும் எளிய வினாக்களுக்கு முழுமையான சொற்றொடரில் விடை கூறுவர். சொற்கள், தொடர்களை முறையாகவும் சரியாகவும் ஒலிப்பர். கேட்டறிந்த கதைகள், பாடல்களைத் தம் கற்பனையின் அடிப்படையில் கூறுவர். தமக்குரிய நடையில் பேசுவர். கேட்டவற்றுடன் தம் அனுபவங்களைத் தொடர்புபடுத்திப் பொருள் விளங்கும் வகையில் தெளிவாக வெளிப்படுத்துவர்.	தமிழ்மொழியின் அனைத்து எழுத்துகளின் ஒலிவடிவ, வரிவடிவத் தொடர்புகளை இனங்கண்டு முறையாக உச்சரிப்பர். வடமொழி ஒலிப்புகளுக்குரிய கிரந்த வரிவடிவங்களை அறிந்து படிப்பர். எளிய சொற்கள், சிறுசிறு தொடர்களை உரிய ஒலிப்புடன் உரக்கப் படிப்பர். எளிய சந்தப் பாடல்களை உரிய ஓசையுடன் படிப்பர். எளிமையான சிறுசிறு படக்கதைகளையும் பாடல்களையும் படிப்பர். படிக்கும் பகுதியின் பொருளுணர்ந்து வினாக்களுக்கு விடையளிப்பர். படித்த பகுதியில் கேட்கப்படும் சிறுசிறு வினாக்களுக்கு விடையளிப்பர்.	படங்களைப் பார்த்துப் பெயர்கள், சிறுசிறு தொடர்களைத் தெளிவாகவும் வரிவடிவம் சிதையாமலும் எழுதுவர். வடமொழி ஒலிப்புகளுக்-குரிய கிரந்த வரி வடிவங்களை அறிந்து எழுதுவர். சொற்களையும், சிறுசிறு தொடர்களையும் சொல்லக் கேட்டு எழுதுவர். எளிய பாடல்கள், கதைகள், உரைநடைப் பகுதிகளிலிருந்து கேட்கப்படும் வினாக்-களுக்கு முழுமையான தொடர்களில் விடையளிப்பர். சிறுசிறு தொடர்களைத் தம்முடைய நடையில் எழுதுவர். கேட்டவற்றை / படித்த வற்றை / சிந்தித்து உணர்ந்தவற்றைப் படங்களாகவோ, சொற்களாகவோ, தொடர்களாகவோ வெளிப்படுத்துவர்.	ஒலி இயைபுச் சொற்களை உருவாக்குவர். ஒருமை, பன்மை விகுதிகளை (கள், க்கள், ங்கள்) அறிந்து பயன்படுத்துவர். பெயர்ச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள், வினைச்சொற்களை அறிந்து பயன்படுத்துவர்.

6. கற்கக் கற்றல்	7. சொல்லாட்சித் திறன்	8. படைப்புத் திறன்	9. விழுமியங்கள்	10. வாழ்வியல் திறன்
படக்கதைகளைப் பார்த்தறிந்து / படித்தறிந்து கதை கூறுவர். பெயர்ப்பலகைகள், அறிவிப்புகளைப் படிப்பர். விரும்பும் நூல்களைத் தேடிப் படிப்பர்.	கீழ்க்காணும் சொற்களைக் கற்றறிந்து பேச்சிலும் எழுத்திலும் பயன்படுத்துவர். பெயர்ச்சொற்கள், வினைச்சொற்கள், பதிலிப் பெயர்ச்சொற்கள் வீடு, பள்ளியில் உள்ள பொருள்களின் பெயர்கள் குடும்ப உறுப்பினர் பெயர்கள் தின்பண்டங்களின் பெயர்கள் எளிய வருணனைச் சொற்கள் ஆங்கில மாதங்களின் பெயர்கள்	முதல் எழுத்தை மாற்றி வேறு சொற்களை உருவாக்குவர். குறிப்பிட்ட எழுத்தில் தொடங்கும் பல்வேறு சொற்களை எழுதுவர். கொடுக்கப்பட்ட சொல்லிலிருந்து பல்வேறு சொற்களை உருவாக்குவர். முதல் சொல்லின் இறுதி எழுத்தை அடுத்த சொல்லின் முதல் எழுத்தாகக் கொண்டு சொற்களை உருவாக்குவர்.	நேரந்தவறாமை விதிகளைப் பின்பற்றுவர். தூய்மைபேணுவர் பொருள்களைப் பாதுகாப்பர் பிறருக்கு உதவுவர் பிற உயிர்களிடத்தில் அன்பு காட்டுவர்.	கீழ்க்காணும் வாழ்வியல் திறன்களைப் பெற்று உரிய நேரங்களில் பயன்படுத்துவர். தன்னை அறியும் திறன். சிக்கல் தீர்க்கும் திறன். முடிவெடுக்கும் திறன். கூர்சிந்தனைத் திறன். படைப்பாக்கச் சிந்தனைத் திறன். சிறந்த தகவல் தொடர்புத் திறன். உறவுகளை இணக்கத்துடன் பேணும் திறன். பிறரை அவர் நிலையிலிருந்து புரிந்துகொள்ளும் திறன். உணர்வுகளைக் கையாளும் திறன். மன அழுத்தத்தைக் கையாளும் திறன்.